உள்ளூராட்சிச் சேவை

அழுத்தகர் பதவி (மாநகரசபை அச்சகம்) கொழும்பு மா. ந. ச. (எஸ்)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சி சேவைத் திணைக்களப் பணிப்பாளரால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனக்கிரமம் வருடாந்தம் ரூ. 6,600—8 × 180—3 × 240—ரூ. 8,760.

3. **வேண்டிய தகைமைகள்.**—(அ) விண்ணப்பதாரர்கள் ஒரு நன்கு மதிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பட்டதாரிகளாக இருத்தல் வேண்டும். அத்துடன் கீழ்த்தரப்பட்டுள்ள தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்:—

அச்சடிப்பு, படவரைவுக்கான லண்டன் பாடசாலையின் தகுதித் தேர்வுப் பத்திரம், அல்லது

மான்செஸ்டர் தொழினுட்பக்கல்லூரி (அச்சடிப்பு) யின் தகுதித் தேர்வுப் பத்திரம் ; அல்லது

லண்டன் சிற்றி அன்ட் கைல்ட்ஸ் ஸ்தாபனத்தின் (அச்சடிப்பு) தகுதித் தேர்வுப் பத்திரம் ; அல்லது

அச்சாளர் அதிபர்கள் பிரித்தானியக் கூட்டவையின் தகுதித் தேர்வுப் பத்திரம் ; அத்துடன் ஆங்கிலம், சிங்களப் பாஷைகளில் நல்ல அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) சி. பா. த. ப. அல்லது சமமான, அல்லது அதற்குயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் ஒரு நன்கு மதிக்கப்பட்ட அச்சகத்தில் ஒரு பொறுப்பான பதவியில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கீழ்க்காணும் தகைமையையுடையவராயிருத்தல் வேண்டும் :—

அச்சடிப்பு, படவரைவுக்கான லண்டன் பாடசாலையின் தகுதித் தேர்வுப் பத்திரம் ; அல்லது

மான்செஸ்டர் தொழினுட்பக்கல்லூரி (அச்சடிப்பு) யின் தகுதித் தேர்வுப் பத்திரம் ; அல்லது

லண்டன் சிற்றி அன்ட் கைல்ட்ஸ் ஸ்தாபனத்தின் (அச்சடிப்பு) தகுதித் தேர்வுப் பத்திரம் ; அல்லது

அச்சாளர் அதிபர்கள் பிரித்தானியக் கூட்டவையின் தகுதித் தேர்வுப் பத்திரம் ; அத்துடன் ஆங்கிலம், சிங்கள பாஷைகளில் நல்ல அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

(இ) கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துடன், ஒரு நன்கு மதிக்கப்பட்ட அச்சகத்தில் 15 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கீழ்க்காணும் தகைமையயுடையவராயிருத்தல் வேண்டும் :—

அச்சடிப்பு, படவரைவுக்கான லண்டன் பாடசாலையின் தகுதித் தேர்வுப் பத்திரம், அல்லது

மான்செஸ்டர் தொழினுட்பக்கல்லூரி (அச்சடிப்பு) யின் தகுதித் தேர்வுப் பத்திரம்; அல்லது

லண்டன், சிற்றி அன்ட கைல்டஸ் ஸ்தாபனத்தின் (அச்சடிப்பு) தகுதித் தேர்வுப் பத்திரம் ; அல்லது

அச்சாளர் அதிபர்கள் பிரிதானியக் கூட்டவையின் தகுதித் தேர்வுப் பத்திரம் ; அத்துடன் ஆங்கிலம், சிங்கள பாஷைகளில் நல்ல அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியகனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பி 9.6.75 ந் திகதிக்குப் பிந்தாமல், உ. ஆ. சே. திணைக்களப் பணிப்பாளருக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

6. உள்ளூராட்சிச் சேவை திணைக்களப் பணிப்பாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிடவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இந்தக் கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அவர்கள் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

ஆர். அபேரத்ன,
பணிப்பாளர்,
உ. ஆ. சே. திணைக்களம்.

த. பெ. 530,
19; லொங்டன் இடம்,
16.4.75.

**4-519—24.04.75** ந் திகதிய வர்த்தமானி இல. 161

---

உள்ளூராட்சிச் சேவை

(நீர்வேலைகள்) பரிசோதகர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை பணிப்பாளரால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு : வருடாந்தம் ரூ. 4,152—17 × (144—8 × (180—ரூ. 8,040. வருடாந்தம் ரூ. 6,024 ம் ரூ. 7,500 ம் பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் உண்டு. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதங்களுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

3. பின்வருபவர்களிடமிருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் :—

(அ) கொழும்பு மாநகர சபையின் எந்திரிய ஓவர்சீயர்கள்.

(ஆ) கொழும்பு மாநகரசபை தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள பின்வரும் பகுதிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் : நீர்வேலைகள் பரிசோதகர்கள், மராமத்து அத்தியட்சர்கள், நீர்வேலைகள் அத்தியட்சர்கள்.

பரீட்சார்த்திகளுக்கு இருக்க வேண்டியவை—

(i) ஏழு வருட செய்முறையனுபவம் அதில் இரு வருடங்கள், நீர்வேலைகளில் உள்ள அனுபவம் ; அல்லது

(ii) நீர்வேலைகளில் குறைந்தது ஐந்து வருட அனுபவம், பின்வரும் தொழில்நுட்பத் தகைமைகளில் ஒன்றுருதல் பரீட்சார்த்திகளுக்கு இருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் சான்றிதழ் (சிவில்) ;

(ஆ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு) மாநகர பொறியியலின் இறுதிச் சான்றிதழ் ;

(இ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு) கட்டட நிர்மாணத்தில் இறுதிச் சரன்றிதழ் ; அல்லது

(ஈ) ஏனைய சமமான தகைமைகள்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் கொழும்பு மாநகரசபைக்கு நியமிக்கப்பட்டால் கொழும்பு மாநகரின் சுற்று வட்டாரத்தின் 10 மைல் எல்லைகளுக்குள் வசிக்க வேண்டும். நீர்வேலைகள் எந்திரியால் கேட்கப் பட்டாலும், கேட்கப்படும்பொழுதும் லபுகம அல்லது கலத்துவேவ தலைமை வேலைத் தலங்களில் வேலை செய்யவேண்டும்.

5. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

# நானாவித அறிவித்தல்கள்

## அக்கரைப்பற்று மத்திய கிராமாட்சி மன்றம்

### கசாப்புக் கடைக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்கள்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டில் 44 ம் இலக்க சட்டத்தின் 7 ம் பிரிவின்படி கீழ்க்காணும் அட்டவணையில் காண்போர்களிடமிருந்து அவர்களின் பெயர்களுக்கு நேரே விபரிக்கப்பட்டுள்ள இடங்களில் 1975 ம் ஆண்டிற்குக் கசாப்புக்கடைகள் நடாத்துவதற்கு எம்மிடம் உத்தரவுப் பத்திரம் கோரி விண்ணப்பங்கள் கிடைத்துள்ளனவென்பதை இத்தால் விளம்பரப்படுத்துகின்றேன்

அக்கரைப்பற்று மத்திய கிராமாட்சி மன்றப்பகுதியில் வாழ்பவர்கள் எவரேனும் இவ்வுத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினால் அவர்கள் இவ்வர்த்தமானி விளம்பரத்திலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் தமது மறுப்புக்களைக் காரணங்காட்டி இரு பிரதிகளில் எழுத்து மூலம் எமக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

அட்டவணை

| விண்ணப்பதாரரின் பெயரும் விலாசமும் | கடை நடாத்துமிடம் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|
| ஜனாப் நெய்னா முகம்மது முகம்மது இஸ்மாயில், 5 ம் குறிச்சி, அக்கரைப்பற்று | அக்கரைப்பற்று 4 ம், 5 ம், 6 ம் குறிச்சிக்கு அமைவாக பெரிய பள்ளியடி அரசையடி மாட்டிறைச்சிக்கடை | மாட்டிறைச்சிக்கடை |
| ஜனாப் ஏ.-எம். எம். அபூபக்கர், பட்டியடிப்பிட்டி, 6 ம் குறிச்சி, அக்கரைப்பற்று. | பட்டியடிப்பிட்டி/பள்ளிக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடை.. | மாட்டிறைச்சிக்கடை |

ஏ. எல். அபுத்தாஹிர் ஜே.பி.,
தவிசாளர்,
கிராமாட்சிமன்றம், அக்கரைப்பற்று மத்தி.

அக்கரைப்பற்று மத்திய கிராமாட்சி மன்றம்,
அக்கரைப்பற்று,
1975 ம் ஆப் பெப்ரவரி மீ 27 ந் உ.

4-527—24.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 161

